## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.

**அசல் வழக்கு எண். 115/2019**

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் நாள் வியாழக்கிழமை என்பவரது சாட்சியாகிய மாரியப்பன் **PW.4** இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 25.04.2024

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | மாரியப்பன் | | |
| Father Name | : | பொன்னையன் | Court | : |
| Village | : | பெருஞ்சேரி. | Taluk | : |
| Calling | : | | Religion | : |
| Age | : | 49 | | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை:

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 4 வது சாட்சி ஆவேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது கிளியனூர் ஊராட்சியில் ஊராட்சி மன்ற செயலாளராக 01.07.2023 லிருந்து தற்போது வரை பணிபுரிந்து வருகிறேன். நான் அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ளபடி 2003 – 2004 ஆம் ஆண்டிற்கான வீட்டு வரி செலுத்திய பதிவேட்டினை நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேன். வாசாஆ 3, வாசாஆ 4, வாசாஆ 5 ஆகியவைகள் எங்கள் அலுவலகத்தால் வழங்கப்பட்டதா என்றால் அதில் உள்ள முத்திரை எங்கள் அலுவலக முத்திரை தான். அதனால் அவைகள் எங்களது அலுவலகத்தால் தான் வழங்கப்பட்டுள்ளது. வாசாஆ 3 ஆனது ஜொகரான்பீவி என்பவர் பெயரில் 1997–1998 ற்கு வழங்கப்பட்டது. வாசாஆ 4, வாசாஆ 5 ஆனது சம்சுல்குதா என்பவர் பெயரில் வழங்கப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>-**

தாவா தெருவில் அமைந்துள்ள கதவிலக்கம் 2/8 என்ற எண்கொண்ட வீடு ஜொகரான் பீவிக்கு சொந்தமானது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாசாஆ 3 ல் கதவு இலக்கம் கிழிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 4 ல் கதவு இலக்கம் 2/8 டா அல்லது கதவிலக்கம் 2/20 என்பது சரியாக தெரியவில்லை என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வீட்டுவரி ரசீதானது எங்களது அலுவலகத்தால் 30.08.2012 அன்று 2010-2011 கான வீட்டுவரி ரசீது அப்துல் வாகீது என்பவர் பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டுவரி ரசீது **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா வீட்டிற்கான வீட்டு வரியானது வாதி முகம்மது ஆரீப் என்பவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அவருக்கு முன்பு யார் பெயரில் இருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் ஆவணங்களை கொண்டு வந்திருந்தால் அதனைப் பார்த்து என்னால் கூறியிருக்க முடியும் என்றால் சரிதான்.

எங்கள் அலுவலகத்தில் வீட்டு வரியை ஒருவர் பெயரிலிருந்து மற்றொருவர் பெயருக்கு மாற்றம் செய்யப்படவேண்டும் என்றால் விண்ணப்பம் பெற்று அதன் பெயரில் விசாரணை நடத்தி உத்தரவு பிறப்பித்ததன் அடிப்படையில் தான் மாற்றம் செய்யப்படும் என்றால் சரிதான். எந்த விசாரணையும் செய்யாமலும், அறிவிப்பு கொடுக்காமலும் ஒருவர் பெயரில் உள்ள வீட்டு வரியை மற்றொருவர் பெயருக்கு மாற்றுவது தவறானதாகும். 2010-2011 ஆண்டில் அப்துல் வாகீது பெயரில் இருந்த வரிவிதிப்பை வேறொருவர் பெயருக்கு எவ்வாறு மாற்றப்பட்டது என்பதை எங்கள் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களை பார்த்தால் தான் என்னால் கூறமுடியும் என்றால் சரிதான். எந்த வித விசாரணையும் மேற்கொள்ளாமலும், எந்த கோரிக்கையும் இல்லாமல் ஒருவர் பெயரில் உள்ள வீட்டு வரியை மற்றொருவர் பெயருக்கு மாற்றியிருந்தால் அவ்வாறு மாற்றப்பட்டது செல்லாது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>:-**

பிவாசாஆ 1 ல் கதவிலக்கம் 3/20 என எழுதி பின்னர் 2/20 என திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த திருத்தமானது எங்களது அலுவலகத்தால்

செய்யப்பட்டதா அல்லது வெளி நபர்களால் செய்யப்பட்டதா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

<u>**மறுகுறுக்குவிசாரணை**</u>:-

கதவிலக்கம் 3/20 யார் பெயரில் உள்ளது என்பதை ஆவணங்களைப் பார்த்தால் சொல்லமுடியும் என்றால் சரிதான்.